# மேட்டுப்பாளையம் நகராட்சி

19.03.2018ம் தேதி புதன் கிழமை மாலை 04.30 மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## <u>கூட்டப் பொருள்</u>

| | |
|---|---|
| [1] | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் சுமார் 21,429 சொத்துவரிவிதிப்புகள் உள்ளன. அதில் 11559 வீடுகளுக்கு மட்டும் குடிநீர் இணைப்புகள் உள்ளன. மேலும் நகரில் உள்ள பொதுமக்கள் வசதி இன்மையாலும், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவராக உள்ளதாலும், குடிநீர் இணைப்புகள் வாங்க இயலவில்லை. ஆதலால் வரிவிதிப்பு உள்ளவர்களுக்கு புதிதாக நகராட்சி மூலம் குடிநீர் இணைப்பு வழங்க மதிப்பீடு சுமார் ரூ.740 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கை (DPR) தயரித்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 682/2018/E1<br>தீர்மானம் எண் : அனுமதிக்கப்பட்டது |

## மேட்டுப்பாளையம் நகராட்சி

28.03.2018ம் தேதி புதன் கிழமை மாலை 04.30 மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

### <u>கூட்டப் பொருள்</u>

<table>
<tr><td>[1]</td><td>
நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7234/2014/ஆர்1 நாள்.28.03.2018 ன் படி நகராட்சி பகுதியில் உள்ள கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்க ஏதுவாக உரிய சட்ட திட்டங்கள் மேற்கொண்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டதை இந்நகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி அதனை மாவட்ட அரசிதழில் வெளியிட தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து கீழ்க்கண்டவாறு இந்நகராட்சி பகுதிகளில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு சொந்தமான கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்க உரிய திருத்தங்கள் மேற்கொள்ளவும் அதனை மாவட்ட அரசிதழில் வெளியிடவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.
<ul>
<li>தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 83 (1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு, சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும்.</li>
<li>தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்து வரி விதிக்கவும்.</li>
<li>தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும்பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்கவும்.</li>
<li>கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவிபெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்து வரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்து வரியாக விதிக்கவும்.</li>
<li>தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)–ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரை ஆண்டிலிருந்து, மேற்படி கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்கவும்.</li>
<li>தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 78 (3) ன்படி ஆட்சேபனைகளை அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் ஏற்படும் செலவினங்களுக்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்தவதற்கும் அனுமதி அளித்துள்ளது.</li>
</ul>
<table>
<tr><td><u>அலுவலகக் குறிப்பு</u></td><td>:</td><td>மேற்கண்ட தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920, பிரிவு 83 (1) ன் படி தமிழ்நாடு அரசிதழ்கள் வெளியிடப்பட்டுள்ளவாறு திருத்தம் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.</td></tr>
<tr><td><u>தீர்மானம் எண் 305</u></td><td>:</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>
</td></tr>
<tr><td>[2]</td><td>
பொறியியல் பிரிவில் இயங்கி வரும் குடிநீர் வாகனம் எண். தா40 4100 ற்கு இவ்வருடத்திற்கு உண்டான வரி மற்றும் பசுமை வரியினை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட உள்ளது.
<table>
<tr><td></td><td></td><td>Tax</td><td>SC</td><td>Total</td></tr>
<tr><td>1)</td><td>வருடாந்திர வரி<br>(வங்கி வரைவோலை)</td><td>ரூ.5640</td><td>ரூ. 57+10</td><td>ரூ.5707/–</td></tr>
<tr><td>2)</td><td>பசுமை வரி<br>(ரொக்கமாக)</td><td>ரூ.500</td><td>ரூ. 15</td><td>ரூ.515/–</td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td><td>ரூ.6222/–</td></tr>
</table>
எனவே மேற்கண்ட தொகையினை வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்த தனி அலுவலரின்
</td></tr>
</table>

| | |
|---|---|
| | ஒப்புதலுக்கு.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.4100/2017/இ1<br>தீர்மானம் எண் 306 : அனுமதிக்கப்பட்டது |
| [3] | மேட்டுப்பாளைம் நகராட்சியில் விநியோகிக்கப்படும் குடிநீர் மாதிரியை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 24251/2010/WS–1, நாள்.26.07.2012ல் மாதந்தோறும் ஆய்வு செய்ய உத்திரவிப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சியில் பராமரிக்கப்படும் தலைமை நீரேற்று நிலையம், நீர் உந்து நிலைய மேல் நிலைத் தொட்டிகள், பொதுக் குழாய்கள் ஆகியவற்றின் குடிநீர் மாதிரியை ஆய்வறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கோவை அவர்களுக்கு அனுப்பி அறிக்கை பெற ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : 1) மன்றம் அனுமதி அளிக்கலாம். 2) பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி ஆய்வினை மேற்கொண்டமைக்கும், அதற்கான தொகை செலுத்தியதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம். ந.க.எண்.106/2011/அ5<br>தீர்மானம் எண் 307 : அனுமதிக்கப்பட்டது |
| [4] | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணி மேற்கொள்ள DBC எனப்படும் களப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்களுக்கு மாவட்ட ஆட்சியர், கோவை அவர்களின் 2016–2017ம் ஆண்டு நிர்ணயப்பட்டியல் மஸ்தூர்–2 ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.275/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது. 2011 ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியில் 18423 குடியிருப்புகள் உள்ளன. எனவே 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 61 பணியாளர்களை பணியமர்த்தி கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்கள் இப்பணியினை 01.04.2018 முதல் 60 நாட்கள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.10,06,500/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம். ந.க.எண்.41/1688/2016<br>தீர்மானம் எண் 308 : அனுமதிக்கப்பட்டது |
| [5] | மேட்டுப்பாளையம் நகராட்சிப் பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட உள்ள பாதாள சாக்கடை திட்டப்பணிக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத் திட்டம் Environmental Clearance பணிக்கு Consent fee for water and air to TNPCB for the year 2018-2019 சான்று பெற கட்டணம் ரூ.105645/–ஐ தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு செலுத்துமாறு நிர்வாக பொறியர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கோவை அவர்களது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்டதொகையினை குடிநீர் நிதி யிலிருந்து தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்துவதற்கு தனி அலுவலர் அவர்களது அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.1819//2016/இ1<br>தீர்மானம் எண் 309 : அனுமதிக்கப்பட்டது |
| [6] | மேட்டுப்பாளையம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு 2018.2019ம் ஆண்டுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் கீழ்கண்ட விபரப்படி வாங்கி வழங்கப்பட வேண்டியுள்ளது.<br><br>1. கையுறை 107 எண்கள் |

| | | | |
|---|---|---|---|
| 2. | கம்பூட் (சூ) | 107 | “ |
| 3. | முக கவசம் | 107 | “ |
| 4. | தலை கவசம் | 107 | “ |
| 5. | ஒளிரும் மார்கவசம் | 107 | “ |
| 6. | ரெயின் கோட் | 111 | “ |
| 7. | காலணிகள் | 111 | “ |
| 8. | ஓட்டுநர்களுக்கு காலனி | 11 | “ |
| 9. | முழு முக கவசம் (Full face mask) for sullage lorry workers | 4 | “ |

மேற்கண்ட பாதுகாப்பு உபகரணங்களை வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ.4.50லட்சத்திற்கும், இப்பொருட்களை தமிழ்நாடு அரசு சிறுதொழில் வளர்ச்சி கழகத்தில் (SIDCO) இருந்து நேரடியாக வாங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | அனுமதி வழங்கலாம். |
| <u>தீர்மானம் எண் 310</u> | : | அனுமதிக்கப்பட்டது |